5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற முறையில், கல்வி (ஆரம்ப உயர்தரக் கல்வி) பற்றிய அறிக்கையில் கண்டுள்ள குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு நடவடிக்கை பற்றிய மேற்படிக் குழுவின் ஆறாவது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அரசினர் தீர்மானம்

விதி 30 (3) ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ஐ தளர்த்தி, பேரவையின் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4, அரசினர் சட்ட முன்வடிவுகள் என்பதன் கீழ் வருகின்ற சட்ட